Aparajitha

# வெற்றியின் விதைகள்

**காலாண்டுச் செய்திமடல்**

***சனவரி - மார்ச் 2019***







தளிர்த் திறன் திட்டம்



29

இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

## உள்ளடக்கம்

வணக்கம் .................... 1

குஜராத்தில் நேரலையில் டிம் டிம் தாரா ஆசிரியர் பயிற்சி . . . . . . . .3

அபராஜிதாவின் புதிய வலைத்தளம். . . . . . . . . . . . . . . . .3

ஹரியானா கல்விச்செயலரின் பாராட்டு. . . . . . . . . . . . . . . . . . . . 4

தமிழ்நாட்டில் தளிர்த்திறன் திட்டம் ஒரு மதிப்பீட்டாய்வு. 5

எதிரொலிகள் . . . . . . . . . . . . . . . . 8

அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி.இரத்தினசாமி சாலை
பீபீ குளம்
மதுரை 635002

0452-4375252

info@aparajitha.org

# வணக்கம்!

பிறந்து, கிடந்து, புரண்டு, தவழ்ந்து எழுகின்ற குழந்தை பின்னர் நடந்து, ஓடி புதிய இடங்களை அடையவும் தாவிக்குதித்து புதிய உயரங்களைத் தொடவும் முயன்றுகொண்டே இருக்கும். அதனைப் போலவே, தளிர்த்திறன் திட்டம் தொடர்ந்து புதிய புதிய முயற்சிகளில் ஈடுபடுகிறது; புதிய புதிய இடங்களைச் சென்றடைகிறது; கடந்த இரண்டு ஆண்டுகளாக புதிய புதிய உயரங்களையும் தொடுகிறது.

அவ்வகையில், இதுவரை வகுப்பறை, காணொளி ஆகியவற்றின் வழியே நடந்த டிம் டிம் தாரா ஆசிரியர் பயிற்சி அண்மையில் செயற்கைகோள் நேரலையில் நடைபெற்றது. ஹரியானா கல்விச் செயலர் டிம் டிம் தாரே பாடங்களால் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள நன்மாற்றங்களைப் பற்றிய செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். தளிர்த்திறன் திட்டத்தால் மாணவர்களிடம் ஏற்பட்டு இருக்கும் மாற்றங்களைப் பற்றிப் பகுப்பாய்வு செய்யப்பட்டு உள்ளது. இவற்றை இவ்விதழ் தங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்கிறது. மேலும், அறக்கட்டளையின் புதிய வலைத் தளத்தைக் காணவும் தங்களை அழைக்கிறது.

அனைத்தையும் படியுங்கள்...
தங்களின் கருத்துகளைப் பகிருங்கள்...
நண்பர்களுக்குப் பரப்புங்கள்...

*தொடர்ந்து தங்களின் ஆதரவையும்
ஆலோசனையையும் எதிர்நோக்கும்,*
***ஆசிரியர் குழு***

*தளிர்த்திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், அரியானா ஆகிய 6 மாநிலங்களில் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

## குஜராத்தில் நேரலையில் டிம் டிம் தாரா ஆசிரியர் பயிற்சி




குஜராத்தில் கடந்த ஆறாண்டுகளாக டிம் டிம் தாரா நடுநிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டம் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு புதன்கிழமையும் 9, 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் 11, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் கல்விச்செயற்கைக் கோளின் வழியாக டிம் டிம் தாரா பாடங்கள் ஒளிபரப்பப்பட இருக்கின்றன. இதனால் 8000 பள்ளிகளில் பயிலும் 16,00,000 மாணவர்கள் பயனடைவர்.

இத்திட்டம் 2018 திசம்பர் 31ஆம் நாள் கல்விச்செயற்கைக்கோளின் வழியாக நேரலையில் தொடங்கிவைக்கப்பட்டது. குஜராத் உயர்நிலை, மேல்நிலைக் கல்வி வாரியத் தலைவர் திருமிகு ஏ. ஜே. ஷா, இணை இயக்குநர் திருமிகு பி. என். ராஜ்கோர் நேரலையில் தோன்றி வாழ்க்கைத்திறன் கல்வியின் தேவையை வலியுறுத்தினார். பின்னர், டிம் டிம் தாரா ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டது. அதன் ஒருபகுதியாக ஒப்பானவர் கற்பித்தல் முறையின் செயல்விளக்கமும் வழங்கப்பட்டது.

## அபராஜிதாவின் புதிய வலைத்தளம்

அபராஜிதா அறக்கட்டளை, ஒன்றை அடுத்து ஒன்று என பல மைல்கல்களைக் கடந்து சென்றுகொண்டிருக்கிறது. அப்பயணத்தை உடனுக்குடன் உலகிற்குத் தெரிவிக்க அதன் வலைத்தளம் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு மாநிலங்களில் நடைபெறும் அதன் செயல்பாடுகள் உடனுக்குடன் அதில் பதிவிடப்படுகின்றன. மேலும் வெற்றிக்கதைகள், ஆசிரியர்களும் மாணவர்களும் வழங்கும் பின்னூட்டங்கள், நலம்நாடிகளின் பாராட்டுகள் ஆகிய அனைத்தையும் www.aparajitha.org என்னும் வலைத்தளத்தில் காணலாம்.

# ஹரியானா கல்விச் செயலரின் பாராட்டு

## प्रदेश के सरकारी स्कूलों में बच्चों के लिए खास पहल

# नैतिक शिक्षा का मंत्र देने के लिए चलेगी विशेष मुहिम

योगेंद्र शर्मा ⏭ चंडीगढ़

सरकारी स्कूलों के बच्चों में नैतिक शिक्षा के साथ-साथ सही ढंग से जीवन यापन करने का मंत्र शुरुआत से डालने के लिए विशेष मुहिम चलाने की तैयारी है। जिसमें शिक्षा विभाग सामाजिक संगठन से मदद लेकर इस काम पर अमल कर रहा है। फिलहाल पांच जिलों में यह योजना चलाई जा रही है, जिसके बच्चों में सकारात्मक परिणाम सामने आए हैं। इस बात को ध्यान में रखते हुए हरियाणा स्कूल एजुकेशन विभाग के अतिरिक्त मुख्य सचिव पीके दास ने प्रदेश के सभी स्कूली बच्चों को इसका लाभ पहुंचाने व प्रदेशभर में लागू करने के निर्देश जारी किए हैं। उक्त कार्य में हरियाणा स्कूल एजुकेशन विभाग की मदद अपराजिता फाउंडेशन संस्था द्वारा की जा रही है। संस्था द्वारा बच्चों में नैतिक गुण पिरोने के उद्देश्य से विशेष मुहिम सबसे पहले अंबाला मंडल के पांच जिलों में चलाई जा रही है, जिस समय संस्था के साथ में एमओयू हुआ था, उस दौर में यह जिले मंडल में आते थे। अंबाला, पंचकूला और यमुनानगर, कुरुक्षेत्र, कैथल जैसे जिले आते हैं। इस संबंध में सहायक निदेशक एकेडमिक नंदकिशोर वर्मा और प्रोग्राम ऑफिसर प्रमोद ने बताया कि अपराजिता केरला की फाउंडेशन ने एक साल पहले कार्यक्रम की शुरुआत की थी। जिसे अंबाला मंडल के अलावा अप्रैल से पांच जिले और शामिल किए जाएंगे। तीसरे चरण में पांच जिले व चौथे चरण में पूरा प्रदेश कवर कर लिया जाएगा।

### साल भर में करोड़ों रुपये खर्च कर रही संस्था

संस्थान और कंपनी की ओर से 110 वीडियो के माध्यम से नैतिक शिक्षा की कहानियां, लाइफ स्किल, अनुशासन, सड़क नियमों का पालन, स्वच्छता की मुहिम, दयाभाव, धर्म, जीवों पेड़ पौधों की रक्षा, वाइल्ड लाइफ, पर्यावरण, पानी बचाने, ईमानदारी जैसे विषयों को शामिल किया गया है। पहले इन्हें प्रोजेक्टर और एजूसैट के माध्यम से बताया जाता है। बच्चों को यह दिखाने के बाद संस्था के मास्टर ट्रेनर जाते हैं, जो बच्चों के सवालों और शंकाओं को दूर करने का काम करते हैं। यह कार्यक्रम सातवीं से लेकर 12 वीं तक के बच्चों को जिंदगी में यह टिप्स दिए जा रहे हैं। पूरे प्रदेश में 1 से 12 वीं तक 21 लाख बच्चे हैं। प्राइमरी में लगभग साढ़े चौदह लाख बच्चे हैं, फिलहाल इसके नीचे के बच्चों को प्रशिक्षण का काम प्राइमरी शिक्षक ही करते हैं। शिक्षकों को ट्रेनिंग, बच्चों को प्रशिक्षण, अपने ट्रेनरों को ट्रेनिंग दी जाती है।

### बेहतर जीवन व नैतिक गुणों के लिए प्रयास



स्कूल एजुकेशन विभाग के एसीएस पीके दास ने कहा कि शिक्षा विभाग को दो दर्जन संस्थाएं बिना कोई पैसा लिए मदद करने का काम कर रही है। इसी क्रम में विभाग संस्था अपराजिता से सहयोग लेने का काम कर रही है। अभी पांच जिलों में चल रही है, जिसके परिणाम अच्छे आ रहे हैं, इसीलिए इसे धीरे-धीरे पूरे प्रदेश में लागू करने का काम किया जाएगा।

ஹரியானா மாநில கல்வித்துறைக் கூடுதல் முதன்மைச் செயலர் திருமிகு பி.கே.தாஸ் டிம் டிம் தாரேவைப் பாராட்டி, அதனை மாநிலம் முழுவதும் விரிவாக்க உத்தரவிட்டிருக்கிறார். அது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

*ஹரியானா கல்வித்துறையானது அபராஜிதா அறக்கட்டளையோடு இணைந்து மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன், கொள்கைவிளக்கக் கல்வியை வழங்கிவருகிறது.*

*குறிப்பாக, வளர்இளம்பருவக் கல்வித் திட்டத்தில் இந்த அறக்கட்டளையின் பாடங்கள் முதற்கட்டமாக அம்பாலா மண்டலத்தில் கடந்த ஓராண்டாகப் பயன்படுத்தப்பட்டன. அம்மண்டலத்திலுள்ள அம்பாலா, யமுனா நகர், குருசேத்திரா, பஞ்சகுலா, கைதல் ஆகிய மாவட்டங்களில் பயிலும் மாணவர்களிடையே இப்பாடங்களால் நடத்தைமாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது.*

*உற்சாகம் தரும் இந்த விளைவால், அந்த அறக்கட்டளையோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் வளர்இளம்பருவக் கல்வித் திட்டத்தின் மூன்றாவது கட்டம் 2019 ஏப்ரலில் தொடங்கும்பொழுது, டிம் டிம் தாரே திட்டப் பாடங்கள் மேலும் ஐந்து மாவட்டங்களில் பயன்படுத்தப்பட உள்ளன. நான்காவது கட்டத்தில் இப்பாடங்கள் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்க உத்தரவிடப்பட்டு உள்ளது.*

# தமிழ்நாட்டில் தளிர்த்திறன் திட்டம்
# ஒரு மதிப்பீட்டாய்வு

தளிர்த்திறன் திட்டம் தமிழ்நாடு, குஜராத், இராஜஸ்தான், ஹரியானா, மத்தியபிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் தமிழ், குஜராத்தி, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. இத்திட்டத்தால் மாணவர்களிடம் ஏற்பட்டுவரும் நடத்தை மாற்றங்கள், திறன்மேம்பாடுகள் ஆகியன பற்றிய பின்னூட்டங்கள் அம்மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் தொடர்ந்து பெறப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இக்கல்வியாண்டில் மாணவர்களிடம் எத்தகைய நடத்தை மாற்றங்களும் திறன்மேம்பாடுகளும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன என்பதை அறிவதற்கான பகுப்பாய்வு தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக, அக்கல்வியாண்டில் கடந்த பருவத்தில் (அக்டோபர் – டிசம்பர்) மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள 10 பள்ளிகளில் பயிலும் 420 மாணவர்களிடம் திரட்டப்பட்ட பின்னூட்டங்களை சான்றுமாதிரிகளை (Samples) அடிப்படையாகக்கொண்டு இப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

மதுரை, சிவகங்கை, ஈரோடு, சேலம், திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆறு மாவட்டங்களிலுள்ள பள்ளிகள் சான்றுமாதிரிகளாக அமைந்தன. அவற்றுள் 20% அரசுப்பள்ளிகள், 50% அரசு உதவிபெறும் பள்ளிகள், 20% தனியார் தன்-நிதிப் பள்ளிகள் ஆகும். இவற்றுள் 30% பெண்கள் மட்டும் பயிலும் பள்ளிகளாகவும் 10% ஆண்கள் மட்டும் பயிலும் பள்ளிகளாகவும் 60% இருபாலரும் பயிலும் பள்ளிகளாகவும் இருக்கின்றன. இப்பள்ளிகளில் 30% ஊரகத்திலும் 70% நகரத்திலும் அமைந்திருக்கின்றன.

பின்னூட்டம் வழங்கிய மாணவர்களில் 35% ஆண்கள், 65% பெண்கள் ஆவர். இவர்களுள் 38% மாணவர்கள் ஊரகப்பள்ளிகளிலும் 62% மாணவர்கள் நகரப் பள்ளிகளிலும் பயில்கின்றனர். 12.8% மாணவர்கள் அரசுப்பள்ளிகளிலும் 74.7% மாணவர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 12.5% மாணவர்கள் தனியார் தன்-நிதிப் பள்ளிகளிலும் பயில்கின்றனர்.

**அட்டவணை** 1: மாணவர்கள் மனத்தில் வாழ்க்கைத்திறன்களின் தாக்கம்

| திறன்கள் | சதவிதம் |
|---|---|
| கொள்கை விளக்கம் | 28 |
| தன்னையறிதல் | 11 |
| நன்னடத்தை | 11 |
| பிறருடன் பழகும் தன்மை | 10 |
| உணர்வெழுச்சிக்கு ஈடுகொடுத்தல் | 10 |
| தகவல் தொடர்பு | 09 |
| பிற | 21 |

இவர்களின் மனத்தில் கொள்கைவிளக்கப் பாடங்கள் அதிகளவில் தாக்கத்தை உருவாக்கியிருக்கின்றன. அதற்கடுத்த இடத்தில் தன்னையறிதல், நன்னடத்தை ஆகியன தொடர்பான பாடங்கள் இடம்பெறுகின்றன. பிறருடன் பழகும் திறன், உணர்வெழுச்சிக்கு ஈடுகொடுத்தல் ஆகியன மூன்றாம் இடத்தைப் பெறுகின்றன. தகவல்தொடர்பு நான்காம் இடத்தைப் பெறுகிறது. கால மேலாண்மை, மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல்,. ஒத்துணர்தல், நலவாழ்வு நடத்தைகள்,பாலின நிகர்நிலை, ஆக்கச்சிந்தனை, முடிவெடுத்தல், ஊடகங்களைப் புரிந்துகொள்ளல், சூழலியல் ஆகியன தொடர்பான பாடங்கள் பட்டியலின் இறுதியில் இடம்பெறுகின்றன. இதற்கு ஆக்கச் சிந்தனை, முடிவெடுத்தல், ஊடகங்களைப் புரிந்துகொள்ளல், சூழலியல் ஆகிய பாடங்கள் இடம்பெற்றுள்ள 9, 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களில் மிகச்சிலரே தமது பின்னூட்டங்களை வழங்கியுள்ளது காரணமாக இருக்கலாம்.

**அட்டவணை** 2:
நகர மாணவர்கள் மனத்தில்
வாழ்க்கைத்திறன்களின் தாக்கம்

| திறன்கள் | சதவிகிதம் |
|---|---|
| கொள்கைவிளக்கம் | 25 |
| உணர்வெழுச்சிக்கு ஈடுகொடுத்தல் | 15 |
| தன்னறியதல் | 14 |
| நன்னடத்தை | 13 |
| பிறருடன் பழகும் திறன் | 09 |
| பிற | 24 |

**அட்டவணை** 3:
ஊரக மாணவர்கள் மனத்தில்
வாழ்க்கைத்திறன்களின் தாக்கம்

| திறன்கள் | சதவிகிதம் |
|---|---|
| கொள்கைவிளக்கம் | 35 |
| பிறருடன் பழகும் திறன் | 14 |
| தகவல்தொடர்பு | 13 |
| நன்னடத்தை | 11 |
| காலமேலாண்மை | 09 |
| பிற | 18 |

பள்ளிகள் அமைந்துள்ள இடங்களின் அடிப்படையில் நோக்கும்பொழுது நகரம், ஊரகம் ஆகிய இரு இடங்களில் பயிலும் மாணவர்களின் மனத்திலும் ‘கொள்கைவிளக்கம்’ தொடர்பான பாடங்களே அதிகளவில் தாக்கத்தை உருவாக்கி இருக்கின்றன. அதற்கடுத்து உணர்வெழுச்சிக்கு ஈடுகொடுத்தல் நகரப்புற மாணவர்களிடமும் பிறருடன் பழகுதல் ஊரக மாணவர்களிடமும் இடம்பெறுகின்றன. மூன்றாம் இடத்தில் ஊரக மாணவர்களிடம் தகவல்தொடர்பும் நகர்ப்புற மாணவர்களிடம் தன்னையறிதலும் இடம்பெறுகின்றன. நன்னடத்தை இருவரிடமும் நான்காம் இடத்தைப் பெறுகின்றன. ஊரக மாணவர்களிடையே காலமேலாண்மையும் நகர்ப்புற மாணவர்களிடையே பிறருடன் பழகும் திறன் ஐந்தாம் இடத்தைப் பெறுகின்றன. ஊரக மாணவர்களிடையே தன்னையறிதல், மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல், உணர்வழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல் ஆகியன முறையே 6, 7, 8ஆம் இடங்களைப் பெறுகின்றன. நகர்ப்புற மாணவர்களிடையே காலமேலாண்மை, தகவல்தொடர்பு, மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல் 6, 7, 8ஆம் இடங்களைப் பெறுகின்றன.

**அட்டவணை 4:**
*ஆண் மாணவர்கள் மனத்தில் வாழ்க்கைத்திறன்களின் தாக்கம்*

| திறன்கள் | சதவிகிதம் |
|---|---|
| கொள்கைவிளக்கம் | 37 |
| காலமேலாண்மை | 12 |
| தன்னையறிதல் | 11 |
| பிறருடன் பழகும் திறன் | 11 |
| நன்னடத்தை | 11 |
| பிற | 18 |

**அட்டவணை 5:**
*பெண் மாணவர்கள் மனத்தில் வாழ்க்கைத்திறன்களின் தாக்கம்*

| திறன்கள் | சதவிகிதம் |
|---|---|
| கொள்கைவிளக்கம் | 33 |
| தகவல்தொடர்பு | 16 |
| பிறருடன் பழகும் திறன் | 15 |
| நன்னடத்தை | 10 |
| மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல் | 07 |
| பிற | 19 |

பாலின அடிப்படையில் நோக்கும் பொழுது ஆண், பெண் இருபால் மாணவர்களின் மனத்திலும் 'கொள்கைவிளக்கம்' தொடர்பான பாடங்களே அதிகளவிற்குத் தாக்கத்தை உருவாக்கி இருக்கின்றன. ஆண் மாணவர்களின் மனத்தில் கால மேலாண்மை இரண்டாவது இடத்தையும் தன்னையறிதல், பிறருடன் பழகுதல், நன்னடத்தை ஆகிய அனைத்தும் மூன்றாவது இடத்தையும் இலக்கு அமைத்தல் நான்காவது இடத்தையும் உணர்வெழுச்சிக்கு ஈடுகொடுத்தல் ஐந்தாவது இடத்தையும் பெறுகின்றன. பெண் மாணவர்கள் மனத்தில் தகவல் தொடர்பு இரண்டாவது இடத்தையும் பிறருடன் பழகுதல் மூன்றாவது இடத்தையும் நன்னடத்தை நான்காவது இடத்தையும் மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல் ஐந்தாவது இடத்தையும் பெறுகின்றன.

இவையனைத்தையும் ஒப்பிடுகையில் இடம், பால் வேறுபாடின்றி 'கொள்கைவிளக்கம்' சார்ந்த பாடங்கள் பெரும்பான்மையான மாணவர்கள் மனத்தில் பெருந்தாக்கத்தை உருவாக்கி இருக்கின்றன. அதற்கடுத்து நன்னடத்தை, பிறருடன் பழகுதல், தகவல் தொடர்பு, தன்னையறிதல் ஆகியன சார்ந்த பாடங்கள் முறையே 2, 3, 4, 5ஆவது இடங்களைப் பெறுகின்றன. பிற பாடங்கள் பட்டியலின் இறுதியில் இடம்பெறுகின்றன. இவற்றுள் சிலவற்றின் முன்னுரிமை வரிசை பள்ளி அமைந்துள்ள இடம், பாலினம் ஆகியவற்றிற்கு ஏற்ப மாறுகின்றன. இதற்குப் பின்வருவன காரணங்களாக இருக்கலாம்:

- மாணவர்களுக்குத் தேவையானவையென வீட்டிலும் பள்ளியிலும் திரும்பத் திருப்பக் கூறப்படும் கருத்துகளின் செல்வாக்கு. எடுத்துக்காட்டாக ஒத்துணர்வு, நலவாழ்வு நடத்தைகள், சூழலியல், ஊடகங்களைப் புரிந்துகொள்ளல் ஆகியன வீட்டிலும் வகுப்பிலும் தொடர்ந்து வலியுறுத்தப்படுவன.

- மாணவர்கள் தங்களுக்குத் தேவையெனக் கருதித் தேர்ந்தெடுத்தவை. எடுத்துக்காட்டாக தன்னையறிதல், உணர்வழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல், மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல், இலக்கமைத்தல், பாலின நிகர்நிலை ஆகியனவற்றின் தேவையை அவர்கள் தமது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளின் அடிப்படையில் உணர்ந்திருக்க வாய்ப்புள்ளது.

# எதிரொலிகள்

53,00,000 மாணவர்கள் என்னும் மைல்கல்லை அடைந்ததற்குப் பாராட்டுகள். தளிர்த்திறன் திட்டம் இவ்வளவு மாணவர்களைச் சென்றடைந்துள்ளதைக் கண்டு வியக்கிறேன். உங்களின் கடின உழைப்பையும் விடாமுயற்சியையும் மதிக்கிறேன். மேலும் மாணவர்கள் பலரைச் சென்றடைய எவ்வளவு இயலுமோ அவ்வளவு பெயர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உங்களால் ஏற்படுத்த முடியுமென நம்புகிறேன்; வாழ்த்துகிறேன்.

*-கௌதம்*
*அமெரிக்கா*

தளிர்த்திறன் திட்டம் மலைக்க வைக்கிறது. சுவேதா என்னும் மாணவி ஆசிரியராக நிலைமாற்றம் அடைந்திருப்பதைக் காண மகிழ்ச்சி. அவரைப் போல மேலும் பல சுவேதாகள் உருவாக வேண்டும். தற்பொழுதுள்ள 5 மாநிலங்களிலிருந்து இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் அனைத்துக் கண்டங்களுக்கும் தளிர்த்திறன் திட்டம் சென்றடைய வேண்டும்.

*- தானியல் செல்வராஜ்*
*தணிக்கையாளர், மதுரை*

தளிர்த்திறன் திட்டம் உண்மையிலேயே எங்கள் அனைவருக்கும் வியப்பையும் மனவூக்கத்தையும் தருவதாக இருக்கிறது.

*- கே. கமலராஜன்*
*தொழிலதிபர், மதுரை*

தளிர்த்திறன் திட்டத்தின் சாதனைகளைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

*- ஷியாம் சுந்தர்*
*மேம்பாட்டு ஆலோசகர், சென்னை*

“நான் தலைவர்” என்னும் திட்டத்தின் தொடர்பணியாக மாணவத்தொண்டரை உருவாக்கும் கருத்தியல் மிகவும் அற்புதம்! வியப்படைய வைக்கும் அளவிற்கு இம்மாணவத் தொண்டர்களின் எண்ணிக்கை விரைவில் அதிகரிக்கும் என நம்புகிறேன். அதேபோல, மலைக்கவைக்கும் அளவிற்கு இத்திட்டத்தால் பயன்பெறுவோரின் எண்ணிக்கையும் பெருகுமென நம்புகிறேன். உங்களின் நற்பணி தொடரட்டும். செய்திமடலின் புதிய வடிவமைப்பு கண்களை ஈர்க்கக்கூடியதாக இருக்கிறது!!!

*- என்.ஏ.நாராயணன்*
*மனிதவளப் பயிற்றுநர், மதுரை*

தளிர்த்திறன் திட்டத்தின் பிரமாண்டமான வளர்ச்சியை இச்செய்திமடல் காட்சிப்படுத்துகிறது. மாணவர்களுக்கு இத்திட்டம் மிகவும் தேவை. ஏனென்றால், இயந்திரமயமான வாழ்க்கையில், குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக தந்தையும் தாயும் வேலைக்குச் சென்றுவிடும் சூழலில், தளிர்த்திறன் திட்டம் மாணவர்களுக்கு நல்லனவற்றைக் கற்பிக்கிறது; அவர்களது வாழ்க்கையில் அவர்களை நற்பாதையில் அழைத்துச் செல்கிறது.

*- ஹரச. சுகுமார்*
*வணிக மேலாளர், அபராஜிதா, பெங்களூரு*